கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 234/2019

பிரதிவாதி தரப்பு சாட்சி – 1 சந்திரன் திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 07.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. வாதிகளை எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரிதான். வாதிகள் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு விவரங்கள் தெரியாமல் தான் பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். இவ்வழக்கில் எத்தனை பிரதிவாதிகளை சேர்த்துள்ளார்கள் என்றால் 4 நபர்கள் மீது தாக்கல் செய்துள்ளார்கள். 5 மற்றும் 6ம் பிரதிவாதிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர்களுக்கு எதிராகவும் தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. 5 மற்றும் 6ம் பிரதிவாதிகள் எனக்கு என்ன உறவு என்றால் எனது அண்ணன் மகள்கள். கூட்டு குடும்பமாக தான் இருந்து வந்தோம். 5 மற்றும் 6ம் பிரதிவாதிகளுக்காவும் நான் இவ்வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. ராசமூப்பன் எனது தந்தை ஆவார். ராமூப்பன் எப்போது இறந்தார் என்றால் 2000ல் இறந்தார். தேதி நியாபகம் இல்லை. எனது தந்தையின் பதிவு செய்துள்ளோமா என்றால பதிவு செய்துள்ளோம். எனது தந்தைக்கு வாரிசு சான்றிதழ் வாங்கியுள்ளோமா என்றால் வாங்கியுள்ளோம். என் வசம் தான் உள்ளது. மேற்படி வாரிசு சான்றிதழில் எத்தனை நபர்கள் வாரிசுகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 4 நபர்கள் ஆகும். மேற்படி வாரிசு சான்றிதழில் எனது தாய் கருப்பாயி பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

3. எனது தாய் கருப்பாயி எப்போது இறந்தார் என்றால் எனது தந்தை இறப்பிற்கு சுமார் 3 முதல் 4 வருடங்களுக்கு பின்பு இறந்தார். எனது

தாயாரின் இறப்பு சான்றிதழ் என் வசம் வைத்துள்ளோ என்றால் வைத்துள்ளேன். கன்னியம்மாள் என்பவர் யார் என்றால் எனது தாயாரின் உடன் பிறந்த அக்கா ஆவார். கன்னியம்மாள் எப்போது இறந்தார் என்றால் எனது தந்தை இறப்பிற்கு முனபே இறந்துவிட்டார். மேற்படி கன்னியம்மாள் தான் எனது தந்தையின் முதல் மனைவி என்றால் இல்லை. எனது தந்தையின் முதல் மனைவி பெயர் செல்லாயி. மேற்படி செல்லாயி முன்பே இறந்துவிட்டார்.

4. எனது தந்தை கன்னியம்மாளை எப்போது திருமணம் செய்தார் என்ற விவரம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது தாய் கருப்பாயை எனது தந்தை எப்போது திருமணம் செய்து கொண்டார் என்றால் தேதி தெரியாது. எனது தாய் கருப்பாயி மற்றும் கன்னியம்மாள் ஆகியோரை எனது தந்தை திருமணம் செய்ததற்கான புகைப்படங்களோ, திருமண அழைப்பிதழோ என்னிடம் இல்லை என்றால் சரிதான். எனது தந்தை ராசமூப்பனுக்கும், கன்னியம்மாள் என்பவருக்கும் நடந்த திருமணத்தின் பயனாக 6 குழந்தைகள் உள்ளார்கள் என்றால் சரிதான். எனது தந்தைக்கும் எனது தாயாருக்கும் நடந்த திருமணத்தின் பயனாக 4 குழந்தைகளும், நாங்கள் அனைவரும் கூட்டு குடும்பமாக இருந்து வந்தோம் என்றால் சரிதான்.

5. ராசமூப்பன் மற்றும் கன்னியம்மாளுக்கும் பிறந்த மூத்த மகன் ஆண்டி 2004ம் வருடம் இறந்து விட்டார் என்றால் சரிதான். மேற்படி ஆண்டியின் மனைவி தான் 1ம் வாதி மருதாயி என்றால் சரியல்ல. மேற்படி ஆண்டி என்பவர் ஏற்கனவே முதல் மனைவி இருந்த சமயத்தில் 1ம் வாதியை திருமணம் செய்துவிட்டார். மேற்படி ஆண்டி மற்றும் மருதாயிக்கு பிறந்தவர்கள் 2 முதல் 6 வரையான வாதிகள் குழந்தைகள் என்றால் சரிதான். ரெத்தினகிரி எனது சகோதர் என்றால் சரிதான். அவர் கன்னியம்மாளுக்கு பிறந்தவர். ரெத்தினகிரி எத்தனை மனைவிகள் என்றால் 3 மனைவிகள். ரெத்தினகிரியின் முதல் மனைவி வீராயிக்கு தமிழரசி மற்றும் வைரமணி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான்.

6. மேற்படி தமிழரசி மற்றும் வைரமணி ஆகியோர்கள் இவ்வழக்கின் 5 மற்றும் 6ம் பிரதிவாதிகள் ஆவார்கள். ரெத்தினகிரி மற்றும் வீராயி தற்போது

உயிருடன் இல்லை. ரெத்தினகிரியின் இரண்டாம் மனைவி மாரியாயி இவ்வழக்கின் 7ம் வாதி என்றால் சரிதான். ரெத்தினகிரி மற்றும் மாரியாயிக்கு பிறந்தவர்கள் 8 முதல் 10 வரையான வாதிகள் என்றால் சரிதான். அழகேசன் எனது தந்தைக்கும் கன்னியம்மாளுக்கும் பிறந்தவர் என்றால் சரிதான். மேற்படி அழகேசன் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான்.

7. மேற்படி அழகேசனின் மனைவி பத்மினி மற்றும் அவரது மகன் வைரபெருமாள் என்றால் சரிதான். அவர்கள் முறையே இவ்வழக்கில் 11 மற்றும் 12ம் வாதிகளாக உள்ளார்கள் என்றால் சரிதான். எனது தந்தைகக்கும் கன்னியம்மாளுக்கும் பிறந்த மகள்தான் 13 முதல் 15 வரையான வாதிகள் என்றால் சரிதான். மேற்படி 13 முதல் 15 வரையான வாதிகள் எனது உடன் பிறந்த சகோதரிகளா என்றால் இல்லை.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai**